அறிமுகம்

# வேதாகமத்தின் 13 திறவுகோல் வசனப்பகுதிகள்

வேதாகமத்தின் செய்தியை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதைப் பற்றி, வாசகர்கள் அடிக்கடி குழப்பம் அடையும் அளவுக்கு இது மிகவும் பெரிய மற்றும் சிக்கலாகக் காணப்படும் புத்தகமாக உள்ளது. ஆதியாகமத்தில் நாம் வாசிக்கும் விஷயங்களுக்கும் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் உள்ளவற்றிற்கும் இடையில் தொடர்பு ஏதாவது உள்ளதா? அப்படி இருக்குமென்றால், அது என்ன? முன் அட்டை முதல் பின் அட்டை வரையில் வேதாகமம் முழுவதையும் படித்தல் என்பதே மிகவும் நிச்சயமான மற்றும் முழுமையான வழியாக உள்ளது என்பது தெளிவு. இருப்பினும் அதை நிறைவேற்றி முடிக்கும் முன்னர் பலர் வேதாகமப் படிப்பை விட்டு விடுகின்றனர்.

இந்தப் பாடவரிசையானது இன்னொரு வழியை அளிக்கிறது. பின்தொடரும் பாடங்கள், வேதாகம ரீதியான திறவுகோல் கருத்துக்களை நமக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம், வேதாகமம் முழுவதையும் நாம் புரிந்துகொள்வதில் நமக்கு உதவக்கூடும். இந்த வசனப்பகுதிகளைப் படித்தல் என்பதை நாம் வேதாகமம் முழுவதையும் படித்தலுக்குப் பதிலியாக்க முடியுமா? நிச்சயமாக இல்லை. அவ்வாறு செய்தல் என்பது, தேவனுடைய வசனத்தின் வளத்தையும் வல்லமையையும் நம்மைவிட்டுக் களவாடுதலாக இருக்கும். செய்தி முழுவதும் எங்கு செல்கிறது மற்றும் அது எதைப்பற்றியதாக உள்ளது என்பதைப் பற்றிய ஆரம்பநிலைக் கருத்தறிவை ஒருவர் கொண்டிருந்தால், அவர் (வேதாகமம்) முழுவதையும் வாசிக்க அதிகம் சாத்தியக்கூறு உள்ளது.

இந்தப் பதிமூன்று வசனப் பகுதிகள் தேர்ந்துகொள்ளப்பட்டுள்ளது ஏன்? இந்தப் படிப்பிற்குத் தேர்ந்துகொள்ளப்பட்டுள்ள வசனப்பகுதி ஒவ்வொன்றும் பின்வரும் நிபந்தனைகள் இரண்டையுமோ அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றையோ சந்திக்கிறது: (1) இது, இஸ்ரவேல் மக்களினத்தின் முன்னேற்றம் அல்லது தொடக்ககால சபை பற்றிய மாபெரும் வரலாற்றுத் தனிச்சிறப்புமிக்க (படைப்பு, பயணம் அல்லது சிலுவையில் அறையப்படுதல் போன்ற) ஒரு நிகழ்ச்சியை விவரிக்கிறது. (2) இது வேதாகமத்தை முழுமையாக நாம் புரிந்துகொள்வதற்கு மையமாக உள்ள (புதிய உடன்படிக்கை, மேசியா அல்லது கிருபையினால் இரட்சிப்பு போன்ற) மிகவும் முனைப்பான மையச் சிந்தனை ஒன்றை முன்வைக்கிறது. பெரும்பான்மையானவை இவ்விரண்டையும் செய்கின்றன.

வேதாகமத்தின் ஒரு முனையில் இருந்து மறுமுனை வரையில் உள்ள பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட பதிமூன்று வசனப்பகுதிகளை ஆய்வு செய்ய முன்மொழிதலானது, முழுமையான செய்தி பற்றித் தனிச்சிறப்பான எதையாவது நமக்குக் கூறக்கூடும், அது நாம் இப்பாடத்தைத் தொடங்கும்போது

தெளிவாக்கப்படும் என்பதில் ஐயமில்லை. வேதாகமம் என்பது தேவனுடைய ஏவுதல் பெற்ற வார்த்தையாக உள்ளது என்பது ஒரு கருத்தாகும். இதன் நீண்ட முன்னேற்றம் மற்றும் நூற்தொகுப்பு முழுவதிலும், இது நம்மைப் படைத்த தேவனுடன் நாம் உறவுபடும் திறனுக்கு மிகவும் இன்றியமை யாதவையாக உள்ள குறிப்பிட்ட சத்தியங்களைக் கொடுக்கும் வகையில் தெய்வீகத் திட்டம் ஒன்றின்படி வடிவமைக்கப் பட்டுள்ளது. வேதாகமம் ஒருங்கமைந்த செய்திஒன்றை முன்வைக்கிறது என்பது இரண்டாவது யூகமாக உள்ளது. இந்தச் செய்தியின் வரலாற்றுத் திருப்பங்கள் மற்றும் திருப்பு முனைகள் யாவற்றுடனும்கூட, தமது பணியைத் திட்டமிட்டு பின்பு தமது திட்டத்தைத் தம்மீது அன்புகூருபவர்களின் நித்திய பயனுக்காகச் செயல்படுத்துகிற தேவனை இது நமக்கு வெளிப்படுத்துகிறது.

எனது பட்டியலில் உள்ளடக்க நான் தேர்ந்துகொண்ட வேதாகம வசனப்பகுதிகள் பின்வருமாறு:

*ஆதியாகமம் 1-3: "தேவன், மனித இனம் & பாவம்"*
*ஆதியாகமம் 12 & 15: "ஆபிரகாம் - இரட்சிப்பின் தொடக்கம்"*
*யாத்திராகமம் 3 & 14: "தேவன் ஒரு மக்களினத்தை மீட்கிறார்"*
*யாத்திராகமம் 20: "உடன்படிக்கை & கட்டளை"*
*2 சாமுவேல் 7: "தாவீதின் மகன்/தேவனின் மகன்"*
*ஏசாயா 53: "பாடுபடும் ஊழியக்காரர்"*
*எரேமியா 31: "ஒரு புதிய உடன்படிக்கை"*
*மத்தேயு 1: "தாவீதின் மகன்/ஆபிரகாமின் மகன்"*
*யோவான் 1:1-18: "வார்த்தை மாம்சமானார்"*
*யோவான் 19 & 20: "சிலுவையில் அறையப்பட்டார் & உயிர்த்தெழுந்தார்"*
*அப்போஸ்தலருடைய நடபடிகள் 2: "பெந்தெகொஸ்தே & அதற்கு அப்பால்"*
*எபேசியர் 2:1-10: "கிருபையினால் இரட்சிக்கப்படுதல்"*
*வெளிப்படுத்தின விசேஷம் 21 & 22: "நிறைவான எதிர்காலம்"*

தேவனுடைய அன்பு பற்றிய மாட்சிமை மிக்க வரலாற்றை விவரிப்பதில் இந்தப் பாடங்களை உதவிநிறைந்த வழிகாட்டியாக நீங்கள் காணவேண்டும் என்பதே எனது ஜெபமாக உள்ளது. நமது தேவனைப் பற்றியும் நமக்காக அவர் அளித்துள்ள மீட்பின் மாபெரும் திட்டம் பற்றியும் அறிதலானது நமக்கு, நிச்சயமாகவே உலகத்திலேயே மிகவும் முக்கியமான விஷயமாக உள்ளது.